MCOP.No. 156/2012

Dated : 23.11.2023

Time: 11.40 a.m to 11.45 a.m

P.W- 1 சாட்சி சதீஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 2-ம் எதிர்மனுதாரர் சார்பாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை

1) 17.04.2012 அன்று TN 77, 7968 என்ற கதிர் அறுக்கும் வாகனத்தில் நான் பயணம் செய்த போதுதான் விபத்து ஏற்பட்டது. அதை ஓட்டி சென்றவர் விஜயகுமார். இது வரை மேற்படி வாகனத்தின் பதிவு சான்றோ, காப்பீட்டு சான்றிதழோ நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்களை ஒப்படைக்க எதிர்மனுதாரர் தரப்பில் அறிவிப்பு வழங்கியும் நான் இதுவரை ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான்.

2) மேற்படி பதிவு சான்றிதழ் அடிப்படையில் மேற்சொன்ன வாகனத்திற்கு இருக்கை, ஓட்டுநர் இருக்கை மட்டும்தான் என்றால் அது தவறு. மேற்படி நெல் அறுக்கும் வாகனத்திற்கு வேறு இருக்கை எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. மேலும் காப்பீடும் அந்த ஒரு இருக்கையில் அமரும் ஓட்டுநருக்கு மட்டும்தான் என்று சொன்னால் அது தவறு. மேற்படி அதில் நான் கட்டணம் செலுத்தாக பயணியாக பயணித்தேன் என்றால் அது தவறு.நான் மேற்படி வாகனத்தில் கிளினராக பணி செய்தேன். ஆனால் அதற்கான ஆதாரம் எதையும் முன்நிறுத்தவில்லை.

3) மேற்படி வாகனம் பயணம் செய்யக்கூடிய வாகனம் என்றால் சரிதான். மேற்படி மோட்டார் வாகன சட்ட விதிமுறைக்கு முரணாக நான் பயணம் செய்து என்னுடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதால் அது காப்பீட்டு விதிமீறல் என்றால் அது தவறு. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள தொகைகள் அதிகமானது என்றால் அது தவறு. என்னுடைய மனு 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் அது தவறு.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/- K.Ananthan,**
**Accidents Claim Tribunal, Attur**